Sale of Tuberculosis seals

* 155 *Q.*—THIRU P. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether Tamil Nadu has bagged the award for the maximum sale of Tuberculosis seals in the sale campaign for 1970–71–72; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) 1968 முதல் 1972 வரை தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகளிலும், அனைத்து இந்தியாவிலும் காச நோய் முத்திரைகளை அதிக அளவில் விற்பதற்காகத் தரப்படும் பரிசை தமிழ்நாடு காச நோய் கழகம் பெற்றுள்ளது.

திரு. ஆ. பரந்தாமன் : தமிழ்நாட்டில் காச நோயினால் பாதிக்கப்பட்டிருப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது என்றும் அதற்குப் பதிலாக குஷ்ட நோய் பரவலாகத் தமிழ்நாட்டில் இருக்கிறது என்றும் மத்திய அரசிலுள்ள அதிகாரி ஒருவர் தெரியப்படுத்தியிருப்பது உண்மையா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த விவரம் என்னிடம் இல்லை. காச நோய் குறைகிற காரணத்தினால் அதற்குப் பதிலாக இது பரவுகிறது என்று சொல்வது தவறு. இந்த நோய் வருவதற்கு ஏதுக்கள் பல இருக்கின்றன. அதைத் தடுப்பதற்கான சாதனைகளும் சில இருக்கின்றன.

கண் தானம் செய்தவர்கள்

* 156 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1970-71, 1971-72-ம் ஆண்டுகளில் கண் தானம் செய்தவர்கள் முறையே எத்தனை பேர்—மாவட்டவாரியாக?

(ஆ) சிறைச்சாலைக் கைதிகள் யாரேனும் கண் தானம் செய்துள்ளார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

	1970-71	1971-72
(அ) மதுரை மாவட்டம்	30	8
முகவை மாவட்டம்	..	1
சென்னை மாவட்டம்	3	1

(இ) ஆம். சென்னை மத்திய சிறைச்சாலைக் கைதிகள் இருவர் 1971-ஆம் ஆண்டில் கண் தானம் செய்துள்ளார்கள்.

திரு. என். கிட்டப்பா : இப்படிப்பட்ட கண் தானம் கொடுப்பவர்களது கண்கள், கண்களை இழந்தோர்களுக்கு முறைப்படி பொருத்தப்பட்டு விட்டனவா என்றும் கண் தானம் செய்யக்கூடியவர்களுக்கு அரசு அளித்து வரும் சலுகைகளையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பல தியாகங்கள் பிறருடைய நல்வாழ்விற்காகச் செய்யப்படுகின்றன என்ற உணர்வு அடிப்படையில் நிறைவேற்றப்படுவதாகும். எனவே, இப்படிப்பட்ட நல்ல உணர்ச்சியோடு செய்கிற தியாகத்திற்கு அரசு ஒரு விலை மதிப்பு போடுவது இயலாத காரியம். மற்றொன்று, இந்தக் கண்களைப் பெற்று மற்றவர்களுக்குப் பொருத்துவது என்பது எல்லா நேரத்திலும் எல்லோருக்கும் இயல்வது அல்ல. சில சூழ்நிலைகளில்தான் இயலக்கூடியவைகளாக இருப்பதற்கான காரணங்கள் இருக்கின்றன. ஆனாலும் தமிழ்நாட்டில் இந்த உணர்வு அதிகமாக வேண்டும். தங்கள் உயிர் நீங்குகிற ஒரு காலத்திலாவது தங்கள் கண்களைப் பிறர் பார்வைக்கு பயன்படுத்த வழங்குகிற ஒரு மனப்பான்மை உருவாக வேண்டுமென்று அரசு விரும்புகிறது.

திரு. கு. பாலகிருட்டிணன் : புரட்சிகரமான சிறந்த திட்டம் என்று போற்றப்படும் முதல் அமைச்சர் அவர்களின் கண் ஒளி வழங்கும் திட்டத்திற்கு அரசு செலவழிக்கும் தொகை என்ன? அத்திட்டம் பற்றி அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இத்திட்டத்தின் கீழ் ஏறத்தாழ ஒரு ஆண்டுக்கு ஒரு லட்சம் பேருக்கு காட்டராக்ட், நீக்க அறுவை சிகிச்சை நடத்துவது என்பது நோக்கம். ஒரு ஆண்டிற்கு 60, 70 லட்சம் ரூபாய் செலவாகும். ஒரு லட்சம் பேர்களுக்கு காட்டராக்ட் அறுவை சிகிச்சை நடத்தும் அதே நேரத்தில் ஒருவருக்கு எட்டு பேர் என்ற அளவில் எட்டு லட்சம் பேர்களுக்கு வேறுவித

1972 ஆகஸ்ட் 18]

மான கண் பார்வைக் குறைவுக்கான சிகிச்சைகள் வழங்கப்படு கின்றன. அப்படிப்பட்ட விரிவான திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் அளவிற்குச் செலவாகும். அரசாங்க வரவு செலவு திட்டத்தில் 1 கோடி ரூபாய் உடனடியாக ஒதுக்குவதற்கு இயலாத ஒரு நிலை இருப்பதைக் கண்டு முதல் அமைச்சர் அவர்கள் தன் பிறந்த நாள் கொண்டாடுகிற நேரத்தில் அதைப் பயன்படுத்தி, வசதியுள்ள வர்கள் நிதி தரவண்டுமென்று கேட்டு ஏறக்குறைய 26 லட்சம் ரூபாய் வசூலாகியிருக்கிறது. மேலும் தொடர்ந்து இந்த நல்ல திட்டத்திற்கான எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படும். அதற்கான எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்று ஏறத்தாழ பத்து இடங்களில் இது வரையில் கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப் பட்டிருக்கின்றன.

திரு. த. சோனையா : கண் தானம் செய்வதற்கு முன்வந்தவர் கள் வரிசையில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்தவர் ஒருவர் என்று தெரிவித்தார்கள். அந்த நல்ல காரியத்தைச் செய்ய வந்த அந்த நல்லவர் பிறந்த ஊர் எது ? அவரது பெயர் என்ன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த விவரம் இல்லை. அது அந்தப் பகுதி உறுப்பினருக்கே தெரியாத அளவிற்கு உள்ள ஒரு செய்தி என்பது இப்போதுதான் தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்களே சொல்லி யிருக்கலாம்.

திரு. எம். தேவராசன் : தூக்கில் இடப்படும் கைதிகளின் கண் கள் எடுக்கப்பட்டு இம்மாதிரி கண் அற்றவர்களுக்கு அளிக்கிற ஒரு ஏற்பாடு நடைபெற்று வருகிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மற்றவர்களின் உரிமையை விட தூக்கிலிடப்படப்போகிறவர்களுக்குள்ள உரிமையை அதிக மாக மதிக்க வேண்டும். எனவே அவர்களாக விரும்பி வழங்க வேண்டும். அப்போதுதான் அந்தக் கண்களைப் பெற முடியும். சிலர் தவறாகக் கருதுகிறார்கள். அதாவது அப்படிக் கண்கள் எடுக்கப்பட்டுவிட்டால் அந்த இடத்தில் குழி விழுந்து இறந்து போனவரின் உடல் கோரமாகக் காட்சியளிக்கும் என்று தவறாக நினைக்கிறார்கள். கண்களில் உள்ள கார்னியா என்ற பகுதியே தேவை. அது எடுக்கப்பட்டு கண் இரப்பைகள் மூடப்பட்டால்

உடல் எந்த வகையிலும் பார்ப்பதற்கு கோரமாக இருக்காது. எனவே நம்மைப் போன்றவர்கள் கூட அப்படி வழங்குவதற்கு முன் வருவது என்ற ஒரு மனப்பான்மையை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தமிழகம் முழுவதிலும் கண் பார்வையற்றவர்கள் எவ்வளவு பேர் என்ற புள்ளி விவரம் எடுக்கப்பட்டிருக்கிறதா. அவர்களுக்குப் பார்வை வழங்க அரசு ஏதேனும் திட்டம் ஏற்படுத்தியிருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் கண் பார்வையற்றோர் எவ்வளவு என்ற புள்ளி விவரம் ஏறத்தாழ எடுக்கப்பட்டிருக்கிறது. 6 லட்சம் பேர் இரண்டு கண்களிலே ஒன்றிலே படலம் ஏற்பட்டு முழுவதும் தெரியாமலும், மற்றொரு கண் படலத்தால் சிறிது மறைக்கப்பட்ட நிலையிலும் இருப்பதாகவும், 3—4 லட்சம் பேர் ஒரு கண்ணில் மட்டும் படலத்தால் மறைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. இது ஓரளவிற்கு 40 முதல் 45 வயதிலிருந்தும் 50 முதல் 60 வயதுள்ளோரிடத்திலும் ஏழை எளிய மக்களிடம் மிகுதியாகவும் உள்ளது. நல்ல ஊட்ட மான இயற்கை உணவை உண்ண வழி இல்லாத மக்களிடத்தில் கண் நோய் அதிகமாகிறது. அதற்கு அறுவை சிகிச்சை அளிக் கும்போது, அந்தப் படலம் ஏற்பட்டு முற்றாத நிலையில் உள்ளோ ருக்கு சிகிச்சை அளிப்பது என்பது முடியாது. காரணம் படலம் முற்றிய நிலையில் இருந்தால்தான் அறுவை சிகிச்சை நடத்த முடியும். இந்தத் திட்டம் 5 ஆண்டு காலத்தில் ஒரு 10 லட்சம் பேர் அளவுக்கு நிறைவேற்றப்பட வேண்டுமென்று அரசு விரும்பு கிறது.

கிராமங்களுக்குப் பொது கழிப்பிடங்கள்

*157 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா ?

(அ) 14—10—1969-ல் நடந்த வட ஆர்க்காடு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், பொதுமக்கள் உபயோகத்திற்கென கிராமங்கள்தோறும் பொது கக்கூஸ்கள் கட்டவும் அதற்கான